

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரம் மற்றும் பழவிளை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கட்டப்பட்டுள்ள ரூ.11.44 கோடி மதிப்பிலான 172 குடியிருப்பு வீடுகள் திறப்பு விழா மற்றும் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் புதிய 90 வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது இதில் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புதிய வீடுகளை திறந்து வைத்து புதிய வீடு அமைப்பதற்கான அடிக்கல் நட்டு வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் அழகு மீனா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ராஜேஷ்குமார், மேயர் மகேஷ் மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



சென்னை, சைதாப்பேட்டையில் நேற்று (17.2.2025) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவு போட்டியில் வெற்றி பெற்ற 37 மாவட்டங்களைச் சேர்ந்த 333 மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி இயக்கக ஆணையர் எ.சுந்தரவல்லி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மக்கள் வரிப்பணத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் செய்கிறது என்பதற்கு

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சே உதாரணம்!

## அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலடி!

சென்னை, பிப். 18-

மக்கள் வரிப் பணத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் செய்கிறது என்பதற்கு ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சே உதாரணம் என்று அமைச்சர் பி.டி.ஆர். பழனி வேல் தியாகராஜன் பதிலடி கொடுத்துள்ளார்.

அது வருமாறு: -

பல 10 ஆண்டுகளாக தேசிய அளவில் கல்வியில் சிறந்த விளைவு எங்கு கிடைக்கிறது எத்தனை சதவிகிதம் படிக்கிறார்கள் எத்தனை நபர்கள் பட்டதாரிகள் ஆகிறார்கள் என்ற எந்த ஒரு அளவுகோல் எடுத்தாலும் பொதுவாக தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாட்டில் உயர்ந்த இடத்தில் இருக்கிற சூழ்நிலையில் டெல்லியில் கல்விக்கொள்கையினை உருவாக்கி பீகாரிலோ, ராஜஸ்தானிலோ,ஏன் குஜராத்திலோ தமிழ்நாட்டை ஒப்பிடுகையில் பாதி அளவிற்கு வர முடியாத மாநிலங்களில் பெரும்பான்மை பெற்ற ஒரு கட்சியும் அதனால் உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்கமும் அவர்களை விட 10 மடங்கு முன்னேறிய மாநிலத்தை நாங்க சொல்ற கொள்கையைத்தான் நீங்கள் பின்பற்ற வேண்டும் என சொல்வது உலகத்திலேயே ஆச்சர்யமாக இருக்கிறது. இதனை அதிர்ச்சி உருவாக்கும் செயலாகத்தான் பார்க்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா கூறிய படி தமிழ்நாடு கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இரண்டு மொழிக்கொள்கை இருமொழிக்கொள்கையை சிறப்பாக செயல்படுத்தி உலக அளவில் இன்றைக்கு நம் இளைஞர்கள் பல சிறந்த பணிகளிலும் அரசு உயர் பொறுப்புகளிலும் இருக்கிறார்கள். நமது கல்வித்திட்டத்தில் இருமொழிக்கொள்கையில் குறை மட்டும் இல்லை என்பதைத் தாண்டி நிறை இருக்கிறது என்பதை நிரூபித்துள்ளோம்.

இருமொழிக்கொள்கை கூட செயல்படுத்த முடியாத பல மாநிலங்களில் ஒரு மொழியை வைத்து அதையும் கூட சரியாக செயல்படுத்தாத மாநிலங்கள் நீங்கள் எங்களுடைய கொள்கையை தான் பயன்படுத்த வேண்டும் எனச்சொல்வது பொருத்தமற்றது இதையெல்லாம் தாண்டி சட்டமைப்பின் படி மாநில அரசுக்கென சில உரிமைகள் இருக்கிறது.ஒன்றிய அரசிற்கு சில உரிமைகள் இருக்கிறது . சில பொது பட்டியலில் இருக்கிறது.



ஆனால் கொள்கை விருப்பமாக சட்டத்தில் இடம்பெறாத புதிய கல்விக்கொள்கையை கொண்டு வந்து விட்டு நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் உங்களுக்கு ஜனநாயக முறைப்படி சட்டமைப்பு படி 15 வது நிதிக்குழு படி தர வேண்டிய நிதியை தர முடியாது எனச்சொன்னால் இது கொடூரமான சர்வாதிகாரி செய்யும் வேலை.மக்கள் வரிப்பணத்தை வைத்து அரசியல் செய்கிறோம் என்பதை ஒன்றிய அமைச்சர் தனது வாயாலே ஒப்புக்கொண்டு விட்டது நல்ல விஷயமாகும்.

முதலமைச்சர் சட்டமைப்பில் எங்கே இடம் பெற்றுள்ளது என மிக தெளிவாக கேள்வி எழுப்பி உள்ளார்.உச்சநீதிமன்றத்தில் இந்த விவகாரம் போய் நிற்க போகிறது. ஒரு மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் படி சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பரிந்துரையை வழங்கப்பட வேண்டிய பணத்தை வழங்காமல் கட்டாயப்படுத்தி வெளிப்படையாக பேசி இருப்பது சட்டமைப்புக்கு விரோதமானது.சட்டமைப்பால் நடத்தப்படுகிற ஒரு நாட்டில் ஒன்றிய அமைச்சரின் வார்த்தையை நீதிமன்றம் கண்டிக்கும் என நான் நம்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி - பிரபாகர ராஜா எம்.எல்.ஏ தொகுதி நிதியில்

# 1.62 கோடி மதிப்பீட்டிலான கட்டிடங்கள் திறப்பு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்

சென்னை, பிப். 18 -

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், இன்று (18.02.2025) மாலை 05.00 மணி அளவில், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர ராஜா ஆகியோர் தொகுதி நிதியில்,

1 கோடி 62 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற பணிகளை, அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்க உள்ளார்.

அதன் விபரம் :

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மண்டலம் 10, வார்டு 128 இளங்கோ தெருவில், ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன உடற்பயிற்ச்சி கூடம் & பல்நோக்கு கட்டிடம், மண்டலம் 10 வார்டு 138, அன்னை சத்யா நகரில், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடிக் கட்டிடம், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர ராஜா தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மண்டலம் 10, வார்டு 128 காமராஜர் சாலையில் 22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை, வார்டு 138 எம்.ஜி.ஆர் நகரில் 30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் வளர்ச்சி மையம், என மொத்தம் ரூ. 1,62,00,000 (ஒரு கோடி அறுபத்து இரண்டு இலட்சம்) மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை, இன்று (18.02.2025) மாலை 05.00 மணிக்கு, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா ராஜன, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் கே.கே.நகர் திரு.தனசேகரன், பகுதிச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மு.இராசா, கே.கண்ணன், மண்டலக் குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. ரத்னா லோகேஷ்வரன், பொன்.வர.லோகு, செல்வி. நிலவரசி துரைராஜ், மாவட்ட துணை செயலாளர் திருமதி.வாசுகி பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் திரு.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், வட்டச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா, ஜம்பு முருகன், திரு.செந்தில்குமார், உள்ளிட்ட வட்டச் செயலாளர்கள், மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொள்கிறார்கள்.

### விவசாயிகள் – தொலைபேசியில் ‘வாட்ஸ் அப்’ மூலம் தெரிவிக்கலாம்!

# அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் குறித்த புகார்கள்!

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் தகவல்!

சென்னை, பிப்.18-

நெல் விவசாயிகள் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் குறித்த புகார்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநரின் அலைபேசி எண்ணிற்கு Whatsapp செய்தியாக தெரிவிக்கலாம் என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படியும் மாநிலம் முழுவதும் நெல் பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி 2600-க்கும் மேற்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நெல் கொள்முதல் நிலையங்களில் நாளொன்றிற்கு சுமார் 12,800 எண்ணிக்கையிலான விவசாயிகளிடமிருந்து சுமார் 60,000 மெ.டன் வரையிலான நெல் கொள்முதல் செய்யப்பட்டு, கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்குண்டான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மின்னணு பரிவர்த்தனை மூலம் நேரடியாக வரவு வைக்கப்பட்டு, நெல் நகர்வு செய்யப்பட்டு வருகிறது.

சில நெல் கொள்முதல் மையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்மூட்டைகளுக்கு கையூட்டு வாங்குவதாக புகார்கள் வருகின்ற காரணத்தினால் நுகர்பொருள் வாணிபக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1. சென்னை தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படக் கூடிய 18005993540 என்ற எண்ணுடன் இயங்கி வரும் உழவர் உதவி மையம் இலவச தொலைபேசியில் புகார்களைத் தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் குறித்த புகார்களை தெரிவிக்கலாம்.

2. மேலும், அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் மண்டல மேலாளர் / முதுநிலை மண்டல மேலாளர் உள்ளிட்ட அலைபேசி எண்களும் விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அந்த அலைபேசி எண்களையும் தொடர்பு கொண்டு விவசாயிகள் புகார்களை தெரிவிக்கலாம்.

3. இத்தகைய புகார்களை தடுத்திடும் விதமாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கூடுதல் பதிவாளர் நிலையில் பிரத்யேக கண்காணிப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் 8 குழுக்கள் அமைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு குழுவிலும் தரக்கட்டுப்பாடு அலுவலர் ஒருவரும் மற்றுமொரு கண்காணிப்பு அலுவலரும் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவானது எழும் புகார்களின் அடிப்படையில் உடனுக்குடன் தொடர்புடைய மாவட்டங்களுக்கு நேரில் சென்று உரிய விசாரணையினை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஜனவரி 2025 முதல் இதுவரை புதுக்கோட்டை மாவட்டத்தில், கரம்பக்குடி மற்றும் விலாப்படி ஆகிய இடங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் இலுப்பை விடுதி ஆகிய இடங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் பணியாற்றும் பணியாளர்கள் கையூட்டு பெறுவதாக வந்த புகார்களையடுத்து விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. தற்காலிக / பருவகால பணியாளர்களை பொறுத்தவரையில் எழும் புகார்களின் மீது உண்மைத் தன்மை கண்டறியப்பட்டால் அவர்கள் உடனுக்குடன் பணியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார்கள். நிரந்தரப் பணியாளர்களை பொறுத்தவரையில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி மேல்நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

5. எனவே, மாநிலம் முழுவதுமுள்ள நெல் பயிரிடும் விவசாயிகள் யாருக்கும் கையூட்டு கொடுக்க வேண்டியதில்லை. புகார்கள் இருக்கும் பட்சத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள எண்களுக்கு Whatsapp மூலமாகவோ அல்லது நேரில் தொடர்பு கொண்டோ புகார்களை தெரிவிக்கலாம்.

6. மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் அலைபேசி எண்ணான 9445257000க்கு Whatsapp செய்தியாக மட்டும் புகார்களை அளிக்கலாம். புகார்களுக்கு ஆதாரமாக ஆவணங்களோ அல்லது காணொளியோ இருந்தால் அதனையும் பதிவிடலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தலைமைச் செயலகத்தில் நேற்று (17.02.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் கலை பண்பாட்டுத் துறை மற்றும் அருங்காட்சியகங்கள் துறைகளின் சார்பில் சட்டமன்ற கூட்டத் தொடரில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், அருங்காட்சியகங்கள் துறை ஆணையர் மற்றும் கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (பொ) திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



மிசாவில் சிறை சென்ற கழக மூத்த முன்னோடி தேவன் மனைவி சித்தரா அண்மையில் இயற்கை எய்தினார். இந்நிலையில் அவரது தருவுருவப் படத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மலர் மாலை தூவி மரியாதை செலுத்தி நிதி உதவி வழங்கினார் உடன் ஒன்றிய கழக செயலாளர் சி.என்.சண்முகம், பெ.பழனி, ப.சம்பத் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்.

# கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தனர்!

மானாமதுரை, பிப். 18 -

கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கும் பணியை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்மையில் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

தற்போது இதற்கான பணிகள் தொடக்க விழா, அருங்காட்சியகம் அமைக்க நிலம் வழங்கிய உரிமையாளர்களுக்கு ரூ.7.44 கோடிக்கு ஆணைகள் வழங்கும் விழா ஆகியவை ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இதற்கு மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமை வகித்தார். மானாமதுரை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் முன்னிலை வகித்தார்.

விழாவில் நிதி, சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் பங்கேற்று திறந்தவெளி அருங்காட்சியம் அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தனர். மேலும், நில உரிமையாளர்களுக்கு ரூ.7.44 கோடிக்கான ஆணை களையும் வழங்கினர்.

இதைத் தொடர்ந்து, கீழடி அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டிருந்த பூம்புகார் கைவினைப் பொருள்கள் விற்பனையகத்தில் விற்பனையைத் தொடங்கி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர்கள் கூறியதாவது: -

சிந்து சமவெளி நாகரிகக் கால கட்டத்தில் தமிழர்கள் பண்பாடு கலாசாரத்துடன், வாழ்ந்ததற்கான அடையாளம் இந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் உலக வரலாற்றில் 2,600 ஆண்டுகளுக்கு முன்னரே பண்பாடு, கலாச்சாரத்துடன் வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

மேலும் நமது முன்னோர்கள் நாகரிக ஆபரணங்களை பயன்படுத்தியது, எழுத்துச்சுவடிகள், தற்காப்புக்காக பயன்படுத்திய ஆயுதங்கள், கட்டுமானப் பொருள்கள் என பல்வேறு பொருள்கள் இது வரை நடைபெற்ற ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டன.

தமிழகத்தில் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புகள் கிடைக்கும் இடங்களைக் கண்டறிந்து, ஆராய்ச்சிப் பணிகளை செயல் படுத்தி முன்னோர்களின் கலாச் சாரத்தையும், பண்பாட்டையும் இளம் தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். கீழடி ஆராய்ச்சி என்பது இந்த மண்ணுக்கு கிடைத்த பெருமை. கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய பகுதிகளில் தொல்லியல் துறையின் மூலம் இது வரை 9 கட்ட அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது 10 ஆம் கட்ட அகழாய்வு நடைபெற்று வருகிறது. கீழடியின் பெருமையை பறைசாற்றும் வகையில், இந்தப் பகுதியைச் சேர்ந்த பலர் தங்களது பங்களிப்பையும் அளிக்கும் நோக்கில், தங்களது நிலங்களை திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்க வழங்கினர். அவர்களைப் பாராட்டி 16 நில உரிமையாளர்களுக்கு மொத்தம் ரூ.7.44 கோடிக்கான ஆணைகள் வழங்கப்பட்டன என்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தெரிவித்தனர்.

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரை யாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவால யத்தில் உள்ள கழக அலுலகத்தில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம் அவர்கள் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, காஞ்சிபுரம் தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா; 2. ஆக்கப் பணிகள் குறித்து,

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
நாள்- 17.02.2025

**நன்னியூர் இராஜேந்திரன்**
செயலாளர்,
தி.மு.க. நெசவாளர் அணி

## புலியைச் சீண்டும் பொல்லாத பாஜக

